# நமது முன்னோர்களை மகிழ்வித்தல்



தாஜி

**பூஜ்யஸ்ரீ லாலாஜி மகராஜ் அவர்களது**

153வது பிறந்தநாள் ஆண்டு விழாவை முன்னிட்டு வழங்கப்பட்ட அருட்செய்தி

2026 ஜனவரி 22, 23 மற்றும் 24, கான்ஹா சாந்தி வனம்



# நமது முன்னோர்களை மகிழ்வித்தல்

அன்பானவர்களே,

ஒவ்வொரு ஆண்டு வசந்த பஞ்சமியின் போதும், வார்த்தைகளில் விவரிக்க இயலாத ஏதோ ஒன்று என் இதயத்தினுள் எழுகிறது. மஞ்சள் நிற பூக்கள், மென்மையான கதகதப்புடன் வீசும் காற்று, இளவேனிற்கால மலர்கள் என இவை அனைத்தும் புதிய தொடக்கத்தை உணர்த்துகின்றன. தெய்வீக ஒளி இந்த பூமியில் இறங்கி வருவதற்காக இந்த நாளைத் தேர்ந்தெடுத்ததனால், இந்தப் பாதையில் பயணிக்கும் நம்மைப் போன்றவர்களுக்கு இந்த நாள், பருவகால தொடக்கத்தையும் கடந்த ஒரு சுகந்தத்தினை அளிக்கின்றது.

1873ம் ஆண்டு பிப்ரவரி 2 அன்று, மக்கள் ஆன்மீகத்தை உணர்கின்ற முறையை நிரந்தரமாக மாற்றக்கூடிய சிறப்புமிக்க ஒரு அவதார புருஷர் தோன்றினார். அந்தக் காலகட்டத்தில், உலகம் அதை அறிந்திருக்கவில்லை. மக்கள் அதை எவ்வாறு அறிந்திருக்கமுடியும்? மகோன்னத ஆன்மாக்கள், எவ்வித ஆரவாரமுமின்றி, எளிமையான தன்மையினுள் தங்களை மறைத்துக்கொண்டு, அமைதியாக வருகை புரிகின்றனர். ஆனால் இயற்கை அதை அறிந்திருந்தது. அன்று இயற்கை ஒரு அமைதியான உறுதிமொழியை வழங்கியது.

அந்தக் குழந்தையின் தாய், பக்தி ததும்பி வழிந்தோடும் இதயம் கொண்ட ஒரு புனிதமான பெண்மணியாவாள். ஒருமுறை, அவதூத்

எனப்படும் ஒரு மறைஞானி, உணவு வேண்டி அவள் வீட்டிற்கு வந்தார். அந்த ஞானி, உண்ணுவதற்கு மீன் வேண்டும் என அவளிடம் கேட்டார். ஆனால் அவள் புலால் உணவை சமைப்பதோ அல்லது உண்பதோ இல்லை என்பதால் அவளால் அவருக்கு அதை அளிக்க இயலவில்லை. இறைவன் அருளால், விவேகத்துடன் செயல்பட்ட அவளது பணிப்பெண், அண்டை வீட்டில் சமைக்கப்பட்ட இரண்டு மீனை கொண்டுவந்து பரிமாறினாள். அந்த ஞானி அதை உண்டு முடித்ததும், “ஏன் வருத்தமாக உள்ளீர்கள்” என்று வினவினார். அந்தப் பெண்மணி எதுவும் கூறாமல் மௌனமாக இருந்தாள். ஆனால் அவளது பணிப் பெண், “உன்னத குணம் கொண்ட என் எஜமானிக்கு குழந்தைச் செல்வத்தைத் தவிர ஏனைய செல்வங்கள் அனைத்தும் உள்ளன” என்று பதிலளித்தாள்.

அந்த ஞானி, நீலநிற வானத்தையும் கடந்து பார்த்தபடி “ஓ” என்று வியப்புடன் கூறினார். சில நிமிடங்களுக்குப் பிறகு, அவர் விண்ணுலகை நோக்கித் தன் விரல்களை உயர்த்தி, புன்முறுவலுடன், ஒன்று… இரண்டு…, ஒன்று… இரண்டு… என்று கூறிவிட்டு அங்கிருந்து விடைபெற்றார். பின்னர் அவர் யார் கண்ணிலும் தென்படவில்லை.

அடுத்த ஆண்டு 1873 வசந்த பஞ்சமி நாளில், அந்தப் பெண்மணிக்கு முதல் மகன் பிறந்தார். அவர்தான் லாலாஜி என்று அறியப்பட்ட, ஃபதேகரை சேர்ந்த ராம் சந்த்ர ஆவார்.

இந்த சிறப்புமிக்க அவதார புருஷரைப் பற்றி ஏற்கனவே யாரும் கூறாததை நான் என்ன கூறிவிட முடியும்? கவிஞர்கள் கூற முயற்சி செய்துள்ளனர், புனித நூல்கள் இவரைப் போன்ற உன்னதமானவர்களை சுட்டிக்காட்டுகின்றன, மேலும் டென்னிசன் எழுதிய இந்த வரிகள் அவருக்காகவே எழுதப்பட்டவைபோல் தோன்றுகின்றன:

*நீரே மனிதராகவும், தெய்வீகமாகவும் தோன்றுகிறீர்,*
*நீரே மிக உன்னதமான, புனிதமான, மனிதத்துவம் கொண்டவர்.*

அவர் ஒரு இளைஞராக இருந்தபோதே, பலராலும் எண்ணற்ற பிறவிகளில் அடைய முடியாததை, ஏழே மாதங்களில் அடைந்துவிட்டார். முயன்று அடையப்பட வேண்டிய ஒரு தொலைதூர இலக்கு என்பதாக தெய்வீக ஒளி அவருள் உதயமாகவில்லை, அது அவருக்குள் இயல்பாகவே இருந்தது.

அவர் அதை நாடவில்லை, அவர் அதுவாகவே இருந்தார்.

மறக்கப்பட்ட பாரம்பரிய வழிமுறை ஒன்று, மனித குலத்திற்காக லாலாஜியின் மூலம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது: அது புனிதமான பிராணாஹுதியை, வாழ்வின் சாராம்சமாகிய *பிராணஸ்ய பிராணாவை* உட்செலுத்துதல் ஆகும். இந்த ஆழ்ந்த ஞானம், அயோத்தியின் ஸ்ரீராமபிரான் அவர்களுக்கு எழுபத்தி மூன்று தலைமுறைகளுக்கு முன் வாழ்ந்த, பூஜ்யஸ்ரீ ரிஷப்தேவ் மகராஜ் என்பவரால், முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. அவர், வாழ்வின் உள்ளார்ந்த சாரத்தையே வழங்கும் இந்த நுண்மையான அறிவியலை வெளிக்கொணர்ந்தவர் ஆவார்.

தெய்வீக பிராணாஹுதியின் மூலம், உணர்வுநிலையின் உயர்நிலைகளை அணுகுவது எளிதாகிறது. ஆர்வலர்கள் *பிரம்மவித்யா* என்பதை, உலக வாழ்க்கையிலிருந்து விலகி சன்னியாசம் மேற்கொண்டு பெறுவதற்கு பதிலாக, இரண்டையும் இணக்கமாக ஒருங்கிணைப்பதன் மூலம் அடைகின்றனர். அதாவது உலகாயத வாழ்க்கையில் முழுமையாக வாழ்ந்துகொண்டிருந்தாலும், உள்முகமாக தன்னை பரம்பொருளுடன் இணைத்துக்கொண்டு, ஒரு இல்லறவாசி *(கிரஹஸ்த)* என்ற முறையில், பொருள்சார்ந்த மற்றும் ஆன்மீகம்சார்ந்த கடமைகளை நிறைவேற்றுவதாகும். தெய்வீகப் பிராணாஹுதியின் ஆற்றல் பிரவாகம், ஒரு ஆர்வலரை சமாதி நிலைகளுக்குள் மிகத் துரிதமாக கொண்டுசெல்கிறது. அவை அன்றாடம் தீவிரமாக மேற்கொள்ளப்படும் தினசரி பயிற்சியின் மூலம், பெரும்பாலும் மிகவும் குறுகிய காலகட்டத்திலேயே அடையப்பெறுகின்றன.

இருப்பினும், காலப்போக்கில் மனித சமுதாயம் வளர்ச்சியடைந்தபோது, இந்த விலைமதிப்பற்ற வழிமுறை படிப்படியாக மனித விழிப்புணர்விலிருந்து மறைந்து, இறுதியில்

தெய்வீக பிராணாஹுதியின் மூலம், உணர்வுநிலையின் உயர்நிலைகளை அணுகுவது எளிதாகிறது. ஆர்வலர்கள் *பிரம்மவித்யா* என்பதை, உலக வாழ்க்கையிலிருந்து விலகி சன்னியாசம் மேற்கொண்டு பெறுவதற்கு பதிலாக, இரண்டையும் இணக்கமாக ஒருங்கிணைப்பதன் மூலம் அடைகின்றனர். அதாவது உலகாயத வாழ்க்கையில் முழுமையாக வாழ்ந்துகொண்டிருந்தாலும், உள்முகமாக தன்னை பரம்பொருளுடன் இணைத்துக்கொண்டு, ஒரு இல்லறவாசி *(கிரஹஸ்த)* என்ற முறையில், பொருள்சார்ந்த மற்றும் ஆன்மீகம்சார்ந்த கடமைகளை நிறைவேற்றுவதாகும்.

தொலைந்தும் போனது. தெய்வீக விதி தலையிடும் வரை, அது இயக்கமற்ற நிலையில் இருந்தது. லாலாஜி மகராஜ் புனிதப் பிரவாகத்தினை மீண்டும் வெளிக்கொணர்ந்து, உயிர்ப்புடன் இருக்கச்செய்தார். அதிஉன்னதநிலையை அடைவதற்கு நேரடியான, உயிர்ப்புள்ள ஒரு பாதையை மனிதகுலத்திற்கு மீண்டும் அளித்தார். இது லாலாஜியின் அன்பளிப்பாகும்: தத்துவத்தையும் போதனையையும் மட்டும் வழங்காமல், இதயத்திலிருந்து இதயத்திற்கு ஆன்மீக சாரத்தை உட்செலுத்தும் வழிமுறையையும் அருளியுள்ளார்.

பின்பு அவரது சீடர் வந்தார்.

ஷாஜஹான்பூரைச் சேர்ந்த, ராம் சந்த்ர (பாபூஜி) என பெயர் கொண்ட ஒரு இளைஞர், ஃபதேகரில் உள்ள மகானைப் பற்றி கேள்விப்பட்டார். லாலாஜி என்ற பெயரைக் கேட்டதுமே, அவருக்குள் ஒரு தூண்டுதல் ஏற்பட்டது. அதனால் அவரைச் சந்திக்கப் புறப்பட்டார். 1922-ம் ஆண்டு, ஜூன் 3 அன்று ஏற்பட்ட அந்த முதல் சந்திப்பு, அவரது வாழ்க்கையை நிரந்தரமாக மாற்றியது.

அவர், “நான் முதன்முதலாக என் மாஸ்டரிடம் சென்றபோது, நான் உணர்ந்த மனநிலைக்கு ஈடு இணை எதுவும் இல்லை. எனது வாழ்க்கையின் அத்தருணத்தில் நான் அனுபவித்த அந்தப் பரவசத்தை என்னால் போதுமான வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அன்று முதல், ஒரு புதிய வாழ்க்கையை வாழத்தொடங்கினேன். அனைத்தும் மாறிவிட்டது போல் தோன்றியது. இந்த உலகமே வித்தியாசமாகத் தோன்றியது” என பின்னர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறாக, ஆன்மீக வரலாற்றில் ஏனைய அனைத்தையும் விஞ்சக்கூடிய ஒரு காதல் காவியம் தொடங்கியது. இந்த வார்த்தைகளை நான் மேலோட்டமாகப் பயன்படுத்தவில்லை, ஏனெனில் லாலாஜிக்கும், அவரது சீடருக்கும் இடையே வெளிப்பட்ட அந்த பக்தி சாதாரணமானது அல்ல. அது, ஒரு மாணவன் தனது ஆசிரியர்மீது கொண்டிருக்கும் மரியாதையைவிட மேலானது. அது



இந்த வார்த்தைகளை நான் மேலோட்டமாகப் பயன்படுத்தவில்லை, ஏனெனில் லாலாஜிக்கும், அவரது சீடருக்கும் இடையே வெளிப்பட்ட அந்த பக்தி சாதாரணமானது அல்ல. அது, ஒரு மாணவன் தனது ஆசிரியர்மீது கொண்டிருக்கும் மரியாதையைவிட மேலானது. அது வார்த்தைகளில் விவரிக்க முடியாததாக, வானுலகில் இருப்பவர்களையும் வியப்பில் ஆழ்த்துவதாக இருந்தது.

வார்த்தைகளில் விவரிக்க முடியாததாக, வானுலகில் இருப்பவர்களையும் வியப்பில் ஆழ்த்துவதாக இருந்தது.

ஒருமுறை பாபூஜி, அவர்களுக்கிடையே இருந்த பிணைப்பைப் பற்றி இவ்வாறு விவரித்தார்: “நாங்கள் ஆன்மீகரீதியாக முழுவதுமாக ஒன்றுபட்டு, எங்கள் இதயம் இரண்டும் ஒன்றுதான் என்பதுபோல், ஒத்திசைந்த நிலையில் இருந்தோம். அன்பிற்குரியவருக்கு மிகவும் அழகானது வேறு எதுவும் இல்லை; அத்தகைய அன்பு, ஒருவரை வரம்புகளைக் கடந்து, அவரை திருப்திப்படுத்துவதற்கு இயன்ற அனைத்தையும் செய்வதற்கு முயற்சிக்க உதவும்.”

மற்றொரு இடத்தில், லாலாஜி இல்லாமல் ஒரு நொடிப்பொழுதுகூட தன்னால் ஜீவிக்க முடியவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். அவர் குறிப்பிட்டது, பல தசாப்தங்களுக்கு முன்னதாகவே மறைந்துவிட்ட பௌதீக வடிவில் இருந்த லாலாஜியைப் பற்றி அல்ல, ஆனால் தனது சுவாசத்தின் சுவாசமாக, *பிராணஸ்ய பிராணாவாக,* தன் வாழ்வின் வாழ்வாக மாறிவிட்ட லாலாஜியைப் பற்றியதாகும்.

ஒவ்வொரு முறை நான் படிக்கும் போதும், என்னைக் கண்கலங்க வைக்கும் ஒரு விஷயத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

லாலாஜியின் செய்திகளில் பாபூஜியைப் பற்றிய கூற்று ஒன்று உள்ளது, அது நம்மை வியப்புடன் மௌனத்தில் ஆழ்த்திவிடும். பாபூஜி தனது மனைவியுடன் இருந்த மிகவும் புனிதமான தருணங்களில்கூட, தனது குருவுடைய நினைவிலிருந்து ஒரு நொடிப்பொழுதுகூட நீங்கவில்லை என்று லாலாஜி குறிப்பிட்டிருந்தார். அவரது உலக வாழ்க்கையின் எந்தவொரு சூழலிலும், அவர்களது இணைப்பு துண்டிக்கப்படாமல் நீடித்திருந்தது.

*பிரம்மச்சர்யம்* என்பதன் உண்மையான அர்த்தம் இதுதான். அது உலகாயத வாழ்க்கையைத் துறப்பது பற்றியது அல்ல, மாறாக அந்த வாழ்க்கையில் நிலையான நினைவைக் கொண்டிருப்பதாகும். பாபூஜியின் உடல் உலகாயத விஷயங்களில் ஈடுபட்டிருந்தாலும், அவரது கவனம் உன்னதமான ஒன்றின் மீது நிலைகொண்டிருந்தது.

அவ்வாறு நிலையான நினைவில் மூழ்கி இருக்கச்செய்யும் அந்த அன்பு எத்தகையதாக இருக்கும்? அத்தகைய நிலைத்தன்மையை நீடித்திருக்கச்செய்யும் அந்த பக்தி எத்தகையதாக இருக்கும்?

இப்போது விசேஷமான விஷயம் ஒன்றை உங்களிடம் பகிர்ந்துகொள்கிறேன்.

*‘ஒளி உலகிலிருந்து மென் குரல்கள்’* உரையாடல் தொகுப்பில், 1945 மார்ச் 21 அன்று பதிவுசெய்யப்பட்ட ஒரு செய்திப் பரிமாற்றம், பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அந்தச் செய்தியில் முதலில், உயர் ஆன்மாக்களில் சிங்கம் போன்று துணிவுமிக்கவரான சுவாமி விவேகானந்தர், பாபூஜியின் மீது லாலாஜி கொண்டிருந்த அன்பு குறித்து பேசுகிறார். அதன்பிறகு ஸ்ரீகிருஷ்ணர் லாலாஜியின் மீதான பாபூஜியின் அன்பு குறித்து பேசுகிறார்.

சுவாமி விவேகானந்தர், “நமது பிரபு (லாலாஜி) உங்கள் மீது கொண்டுள்ள அன்பைப் பற்றிக் கூறிய அனைத்தும் முற்றிலும் நிதர்சனமானவை. அவர் உங்கள் மீதான அன்பில் முழுவதுமாக திளைத்துக் கொண்டிருக்கிறார். இதுபோன்ற ஒரு அன்பை இதுவரை என் வாழ்நாளில் நான் வேறெங்கும் கண்டதில்லை” என்றார். பிறகு, “மக்கள் கடவுளை அடைவதற்கு தங்கள் இல்லங்களை துறக்கின்றனர்: அவரோ உங்களுக்காக அவரது இல்லத்தைத் துறந்தார். இது பிறவா நிலை அடைந்த ஒரு ஆன்மாவிடமிருந்து எதிர்பார்க்க முடியாத மிக உன்னதமான தியாகமாகும்” எனக் கூறினார். இங்கு லாலாஜி குறுக்கிட்டு, இந்த உரையாடலை பாபூஜி தனது நாட்குறிப்பில் பதிவு செய்யவேண்டாம் என கேட்டுக்கொண்டார்.

பிறவா நிலையை அடைந்தவராகிய குருநாதர் லாலாஜி, தனது சீடர் பாபூஜிக்காக, *பண்டார்* எனும் தனது வானுலக சுவர்க்கத்தினை விட்டு கீழிறங்கி வந்தார். குரு தனது சிஷ்யருக்காக இறங்கி வந்தார், சுவர்க்கம் பூமிக்கு வந்தது.

அதன் பிறகு ஸ்ரீகிருஷ்ணர் பேசுகிறார், அவரது வார்த்தைகளை இப்போது நான் எழுதும்போதுகூட என் கைகள் நடுங்குகின்றன: “சுவாமி விவேகானந்தர் கூறியது முற்றிலும் உண்மைதான். அன்பு செலுத்துவதில் நீங்கள் ராதையையும் மிஞ்சிவிட்டீர்கள் என்று எழுதுவதில் தவறேதும் இல்லை.... ராதையின் அன்பு இப்போது உங்களுடைய அன்பிற்கு அடுத்ததாகத் தான் உள்ளது” என்றார்.

இதன் பொருள் என்னவென்று உங்களுக்குப் புரிகிறதா? ஸ்ரீகிருஷ்ணர் மீதான ராதையின் அன்பு, பக்திக்கான அதிஉயர்ந்த உதாரணமாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக போற்றப்பட்டு வருகிறது. ராதை என்கின்ற பெயர், தெய்வீக பக்தி என்பதற்கு ஒத்த

சொல்லாக மாறிவிட்டது, இருப்பினும் ஶ்ரீகிருஷ்ணர், லாலாஜி மீதான பாபூஜியின் அன்பு, ராதையின் அன்பையும் மிஞ்சிவிட்டதாகப் பிரகடனம் செய்கிறார்.

ஆனால் அந்தக் கதை அதனுடன் முடியவில்லை. மூன்று நாட்களுக்கு பிறகு, அது படைப்பு தோன்றியதிலிருந்து இதுவரை நிகழ்ந்திராத ஒரு உச்ச நிலையை அடைந்தது.

மங்களகரமான நாளான, 1945 மார்ச் 24 அன்று, இறுதிப் பரம்பொருளிடமிருந்து பாபூஜி நேரடியாக தீட்சை பெறுவதற்கு, லாலாஜி ஏற்பாடு செய்திருந்தார். இதைக் கண்ட ஶ்ரீகிருஷ்ணர், "உங்கள் மதிப்பிற்குரிய குருநாதர் உங்களை, இறுதிப் பரம்பொருளிடமிருந்து நேரடியாக தீட்சை பெறச் செய்த இந்த நாள் மிகவும் மங்களகரமான நாளாகும். இதுதான் உண்மையான தீட்சை ஆகும். படைப்பின் தொடக்கத்திலிருந்து இவ்வாறு நிகழ்வது இதுவே முதல் முறையாகும்" என்று பிரகடனம் செய்தார்.

சுவாமி விவேகானந்தர், "இறுதிப் பரம்பொருளிடமிருந்து நீங்கள் நேரடியாக தீட்சைப் பெறுவதை கேள்வியுற்று, நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். உலகம் தோன்றிய நாளிலிருந்து, இவ்வாறு நிகழ்வது இதுவே முதல் முறையாகும்" என்று கூறினார்.

இப்போது, சற்று இடைநிறுத்தம் செய்து, என் இதயத்திற்கு வியப்புடன் கூடிய வேதனை தரும் ஒரு விஷயத்தைக் கேளுங்கள்.

இந்த மகத்தான நிகழ்விற்குப் பிறகு, அமைதியான கூற்று ஒன்றினை லாலாஜி வழங்கினார். அது அவரது சுயநலமற்ற தன்மையின் ஆழத்தை வெளிப்படுத்தியது. அவர், "நேரடி தீட்சை என்பது முற்றிலும் நான் கண்டறிந்த வழிமுறையாகும். இதற்கு முன்பு, அது யாருடைய புரிதலுக்கும் எட்டவில்லை, அது ஒருபோதும் நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை" என்று கூறினார்.



இந்த மகத்தான நிகழ்விற்குப் பிறகு, அமைதியான கூற்று ஒன்றினை லாலாஜி வழங்கினார். அது அவரது சுயநலமற்ற தன்மையின் ஆழத்தை வெளிப்படுத்தியது. அவர், "நேரடி தீட்சை என்பது முற்றிலும் நான் கண்டறிந்த வழிமுறையாகும். இதற்கு முன்பு, அது யாருடைய புரிதலுக்கும் எட்டவில்லை, அது ஒருபோதும் நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை" என்று கூறினார்.

இதன் பொருளை உங்களால் முழுவதுமாகப் புரிந்துகொள்ள முடிகிறதா? அந்த வழிமுறை அவருடைய கண்டுபிடிப்பு என்பதால், லாலாஜி அது பற்றி நன்கு அறிவார். தனது வாழ்நாளில், அவருக்கு முன் வாழ்ந்த எந்தவொரு ஆன்மாவும் புரிந்துகொள்ளாத ஒன்றை அவர் புரிந்துகொண்டிருந்தார்: அது இறுதிப்பரம்பொருளிடமிருந்து நேரடியாக தீட்சை பெறுவதற்கான சாத்தியக்கூறு. அவர் அதைத் தனக்காகப் பயன்படுத்தியிருக்கலாம், ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. இந்த உன்னதமான ரகசியத்தைத் தனக்குள் பாதுகாத்துக்கொண்டு, அத்தகைய அன்பளிப்பைப் பெறுவதற்கு ஏற்ற நிலையைத் தன் அன்பிற்குரிய சீடர் அடையும் வரை காத்திருந்தார். பாபூஜி அந்த உன்னத நிலையை அடைந்தபோது, லாலாஜி அந்த வழிமுறையைத் தனது சீடருக்காகப் பயன்படுத்தினார்.

ஆசிரியர், மாணவருக்கு முன்னுரிமை அளித்து, இதுவரை தான் அணுகாத ஒன்றை மாணவருக்கு வழங்கினார். அத்தகைய அன்பு தர்க்கரீதியானதற்கு அப்பாற்பட்டது. அது பெற்றோர் தங்கள் குழந்தைக்காக செய்யும் தியாகம் அல்லது ஒரு அன்பர் தன் அன்பிற்குரியவருக்காக அனைத்தையும் அளிப்பது என எல்லாவற்றிற்கும் மேலானது. இங்கு குருநாதர், அதிஉன்னதமான ஆன்மீக அன்பளிப்பைக் கண்டறிந்து, அதைத் தனது சீடருக்கு வழங்கி, தன்னை வெளிப்படுத்திக்கொள்ளாமல், தான் நாடாத உயர்நிலைகளை தனது சீடர் அடைவதைக் கண்டு மனநிறைவு அடைந்தார்.

இந்த மகத்தான அன்பளிப்பை வழங்கிய பிறகு, லாலாஜி தன் நிலை குறித்து என்ன கூறினார்? லாலாஜி, “ஆயிரக்கணக்கான அடிமைகளுக்கு தலைவனாக இருந்த மன்னர் மஹ்மூத் கஸ்னவி, தீவிர வறுமையால் பீடிக்கப்பட்டு, “ஒர் அடிமையின் அடிமை” என்ற கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்” என்ற ஒரு பாரசீக ஈரடிப் பாடலை மேற்கோள் காட்டியதுடன், மிகுந்த எளிமையுடன், “இதுதான் என் நிலை” என்றும் கூறினார்.

மாஸ்டர்களின் மாஸ்டரான, இழக்கப்பட்ட ஒன்றை மீட்டுத்தந்த சிறப்புமிக்க அவதாரபுருஷரான, யார் மூலமாக மனிதகுலம் அனைத்திற்கும் பிராணாஹுதி பிரவாகமாகப் பாய்கின்றதோ, அவர், தன்னைவிட உயர்ந்த ஒன்றை தனது சீடருக்கு வழங்கியதால், தன்னை “ஒர் அடிமையின் அடிமை” என கூறிக்கொண்டார்.

இங்கு, இறுதிக்கட்ட பலனை தனது சீடர் முதலில் பெற வேண்டும் என்பதற்காக, அதைத் துறந்துவிட்ட ஒரு குருவின் புனிதமான



உண்மையில், தன் சீடன் தன்னை மிஞ்சி உயர்வடைவதைக் காண்பதும், தன் அன்பிற்குரியவர் முன்னேற்றம் அடைவதை கவனிப்பதும், அனைத்தையும் அளித்துவிட்டு மனநிறைவை மட்டுமே அதற்கு பலனாகப் பெற விரும்புவதும் ஒரு குருநாதர் பெறக்கூடிய மிகச்சிறந்த மகிழ்ச்சியாகும்.

அன்பினை நாம் காண்கிறோம். படைப்பில் உள்ள மாபெரும் ரகசியத்தை தான் கண்டறிந்தபோதும், அதை மற்றொருவருக்கு அன்பளிப்பாக அளிக்கும் அளவிற்கு அவரது இதயம் மிகவும் விசாலமாக இருந்தது; ஆனால், இதை ஒரு தியாகம் என்று கூறுவது, ஒரு உண்மையான குருவின் இதயத்தை தவறாகப் புரிந்துகொள்வதற்கு ஒப்பாகும். இத்தகைய அன்பளிப்பு, லாலாஜிக்கு எல்லையற்ற மகிழ்ச்சியின் ஆதாரமாக இருந்தது.

உண்மையில், தன் சீடன் தன்னை மிஞ்சி உயர்வடைவதைக் காண்பதும், தன் அன்பிற்குரியவர் முன்னேற்றம் அடைவதை கவனிப்பதும், அனைத்தையும் அளித்துவிட்டு மனநிறைவை மட்டுமே அதற்கு பலனாகப் பெற விரும்புவதும் ஒரு குருநாதர் பெறக்கூடிய மிகச்சிறந்த மகிழ்ச்சியாகும். ஒரு தாய் தனது குழந்தைக்கு உணவளிப்பதும் அல்லது ஒரு நதி கடலுக்குள் ஒன்றுகலப்பதும், தியாகம் என்று ஆகாது. பாபூஜியை இறுதிப் பரம்பொருளிடம் இருந்து தீட்சை பெறும் முதல் மனிதராக தகுதிபெறச் செய்வது என்பது லாலாஜிக்கு நிறைவையும், பேரானந்தத்தையும் அளிப்பதாக இருந்தது.

இதுதான் அன்பு. இதுதான் பாதை. இதைத்தான் நாம் வசந்த பஞ்சமி அன்று போற்றுகிறோம்.

ஒருமுறை தற்போதைய யுகம் குறித்து லாலாஜி கூறுகையில், “இப்போதுள்ள காலகட்டம் போன்ற ஒன்று, நீண்ட காலத்திற்கு மீண்டும் வராது. ‘மஜ்னூன் வனத்தை தனது வீடாக அமைத்துக்கொண்டான், ஆனால் நானோ என் வீட்டையே ஒரு வனமாக மாற்றிவிட்டேன்’, என்ற பழமொழி இந்த விசேஷமான காலகட்டத்திற்குப் பொருத்தமாக இருக்கும்” என்று கூறினார். பிரசித்திபெற்ற காதலனான மஜ்னூன், காதலால் பித்துப் பிடித்தவனாக, உலகை விடுத்து, காட்டினுள் அலைந்தான். இதற்கு மாறாக, குருநாதர் லாலாஜி தன் சீடருக்காக, தனது விண்ணுலக இருப்பிடத்தை, தீவிர ஏக்கம் கொண்ட வனமாக மாற்றினார்.

ஸ்ரீகிருஷ்ணர், பாபூஜியின் ஆன்மீக நிலை, *அனுத்தரா* என்ற உயர்நிலைக்கு ஒத்தது என விவரித்தார். அவர், “இத்தகைய தகுதிவாய்ந்த ஒருவர், சில நேரங்களில் பல ஆண்டுகள், பல நூற்றாண்டுகள் அல்லது பல யுகங்களுக்குப் பிறகு கூட திடீரென தோன்றுவார். அவருக்கு நிகராக எவரும் இருப்பதில்லை. அத்தகைய தகுதியுடைய ஒருவர், கடவுளின் ஆணையால் பிறக்கின்றார். நீங்கள் தான் அதற்கு உதாரணம்” என்று கூறினார்.

1931-ல் லாலாஜி தனது பௌதீக உடலை நீத்தபோது, பாபூஜி “உண்மையில், என் மாஸ்டர் இறக்கவில்லை, நானே இறந்துவிட்டதாக உணர்ந்தேன்” என்று எழுதினார். அதன்பிறகு பல ஆண்டுகளுக்கு, அவரது நாட்குறிப்பு பெரும்பாலும் எழுதப்படாமலே இருந்தது. லாலாஜி ஜீவித்திருந்த போது, அதிக அளவு விஷயங்களை முனைப்புடன் பதிவு செய்து கொண்டிருந்த அந்த சீடர், பின்னர் செயலற்ற நிலைக்கு சென்று விட்டார்; அந்த அமைதியிலிருந்து ஏதோ ஒன்று வெளிப்படுவதற்குக் காத்திருந்தது.

அதன் பிறகு, 1944ல் அவர்களுக்கிடையேயான கருத்துப்பரிமாற்றம் மீண்டும் தொடங்கியது. பௌதீக மரணத்தால் முடிவுற்றதாகத் தோன்றிய அந்த உறவுமுறை, வேறு வடிவத்தில் தொடர்ந்தது. லாலாஜி, வழிநடத்துவதையும், பிராணாஹுதி வழங்குவதையும், அன்பு செலுத்துவதையும் தொடர்ந்தார். பிணைப்பு மரணத்தைக் கடந்துசென்றது, அன்பு உடலைக் கடந்துசென்றது, பிராணாஹுதி தொடர்ந்துகொண்டிருக்கிறது.

இதை ஏன் வசந்த பஞ்சமி நாளன்று பகிர்ந்து கொள்கிறேன்? ஏனெனில் உங்களுக்கு என்னவெல்லாம் அருளப்பட்டுள்ளது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

நீங்கள் தியானத்தில் அமர்ந்து, உங்கள் இதயத்தில் அந்த மென்மையான அதிர்வை உணர்கையில், லாலாஜிக்கும் பாபூஜிக்கும் இடையே பாய்ந்த அதே பிரவாகத்தை நீங்கள் ஸ்பரிசிக்கிறீர்கள். நீங்கள் பிராணாஹுதியைப் பெறும்போது, எண்ணற்ற தலைமுறைகளாக இழந்துவிட்ட, பின் மீண்டும் மனித குலத்திற்காக மீட்டெடுக்கப்பட்ட அந்த அன்பளிப்பைப் பெறுகிறீர்கள். மேலும், வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஏதோவொன்றிற்காக, ஆழ்ந்த ஏக்கத்தை நீங்கள் உணரும்போது, ராதையின் அன்பையும் மிஞ்சிய ஒரு அன்பின் எதிரொலியை நீங்கள் உணர்கிறீர்கள்.

இதுதான் நமது மரபுரிமையும், பிறப்புரிமையும் ஆகும். 1873ம் ஆண்டு வசந்த பஞ்சமி நாளில் பிறந்த ஒரு குழந்தை, பின் ஒரு குருவாக ஆனதாலும், படைப்பு தொடங்கியது முதல் இதுவரை காணாத இணையற்ற அன்பினை ஒரு சீடர் அந்த குருவின்மீது கொண்டிருந்ததாலும், இது நமக்கு அருளப்பட்டுள்ளது.

வசந்தகால மலர்கள் மலர்கின்றன, உலகம் தன்னையே புதுப்பித்துக் கொள்கிறது, மேலும் பிராணாஹுதி தன் பணியைத் தொடர்வதால், பயிற்சி செய்கின்றவர்களின் இதயங்களில், ஒவ்வொரு நாளும், அதே புதுப்பித்தல் அமைதியாக நிகழ்கின்றது.

இந்த வசந்த பஞ்சமி நாளில், இவை அனைத்தையும் சாத்தியமாக்கிய, மகோன்னத அவதாரப் புருஷர், பூஜ்யஸ்ரீ லாலாஜி மகராஜ் அவர்களின் பாதங்களில் தலை வணங்குகிறேன். மேலும் ஆன்மீகப் பாதையின் கதவுகளை, தன் அன்பினால் திறந்து, அதை என்றென்றும் மூடாதபடி செய்த, பூஜ்யஸ்ரீ பாபூஜி மகராஜ் அவர்களின் பாதங்களிலும் தலை வணங்குகிறேன்.

நாம்தான் இந்த பரம்பரையின் வாரிசுகள். இது எப்பேர்ப்பட்ட குருநாதர்களின் பரம்பரை! எப்பேர்ப்பட்ட ஒரு பொக்கிஷம் நமக்கு அளிக்கப்பட்டுள்ளது! இப்போது பொறுப்பு நம் கையில் உள்ளது: இந்த ஆன்மீக செல்வத்தைக் கொண்டு நாம் என்ன செய்யப்போகிறோம்?

அதன் மகத்துவத்தை உணர்ந்து செயல்படுவோம். நமது ஆன்மீகப் பெரியோர்கள் அதீத மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடையும்படி செய்வோம். ஒற்றுமையுடனும் பரஸ்பர மரியாதை மற்றும் அன்புடனும், அவர்களது வாழ்க்கையின் அர்த்தமாக நாம் வாழ்வதை, அவர்கள் ஒளி உலகிலிருந்து கண்டு ஆனந்தக்களிப்பில் நடனமாடட்டும்.



அதன் மகத்துவத்தை உணர்ந்து செயல்படுவோம். நமது ஆன்மீகப் பெரியோர்கள் அதீத மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடையும்படி செய்வோம். ஒற்றுமையுடனும் பரஸ்பர மரியாதை மற்றும் அன்புடனும், அவர்களது வாழ்க்கையின் அர்த்தமாக நாம் வாழ்வதை, அவர்கள் ஒளி உலகிலிருந்து கண்டு ஆனந்தக்களிப்பில் நடனமாடட்டும்.

இந்த பாரம்பரியமிக்க மரபைப் பாதுகாத்து வளப்படுத்துவதற்கு, நாம் அவர்களின் நியமத்திற்கு ஏற்ப நடந்துகொள்வதும், சிந்திப்பதும், செயல்படுவதும் இன்றியமையாததாகிறது. இந்தப் பாதையால் ஈர்க்கப்படும் ஒவ்வொரு குடும்பத்திலும் நல்லிணக்கம் நிலவட்டும். ஆன்மீக ஆர்வலர்கள் கூடும் ஒவ்வொரு மையத்திலும் நல்லிணக்கம் நிலவட்டும். சில நேரங்களில், ஆன்மீக சமூகங்களுக்கு இடையில் ஊடுருவும் சிறுசிறு பிரிவினைகள், இந்த வசந்த காலச் சூரியனின் வெப்பத்தில் கரைந்து மறையட்டும். நாம் அனைவரும் ஒரே பரம்பரையைச் சேர்ந்த குழந்தைகள், ஒரே பிராணாஹுதியைப் பெறுபவர்கள், ஒரே இலக்கை நோக்கிப் பயணிப்பவர்கள் என்பதை நினைவில் கொள்வோமாக.

லாலாஜி, தனது சீடர் பரிணமிப்பதைக் காண்பதில் உள்ள மகிழ்ச்சிக்காக, தனது மகத்தான கண்டுபிடிப்பையே விட்டுக்கொடுக்க முடிந்ததெனில், ராதையின் அன்பையும் மிஞ்சிய அன்புடன் பாபூஜியால் நேசிக்க முடிந்ததெனில், நிச்சயமாக நாமும், நம்முடன் இருக்கும் சகோதர சகோதரிகளுக்கு நட்புக் கரம் நீட்டி, சிறு குறைகளை விட்டுச்செல்ல அனுமதித்து, நமக்குள் பொழியப்பட்டவற்றிற்குத் தகுதியானவர்களாக நம்மை மாற்றிக்கொள்ளலாம்.

எனவே, நமது குருநாதர்களின் அன்பு உங்கள் இதயத்தை நெகிழச்செய்யட்டும், பிராணாஹுதி உங்கள் ஜீவிதத்தை மாற்றியமைக்கட்டும், உங்களுக்கு உகந்த வழியில், அவர்களின் பாரம்பரியத்தை பறைசாற்றுபவர்களாக நீங்கள் திகழ்வீர்களாக.

அன்புனுடம் பிரார்த்தனையுடனும்

**கம்லேஷ்**

*வசந்த பஞ்சமி, ஜனவரி 23, 2026*

*பூஜ்ய ஸ்ரீ லாலாஜி மகராஜ் அவர்களது*
*153வது பிறந்தநாள் ஆண்டு விழாவை முன்னிட்டு வழங்கப்பட்ட அருட்செய்தி*
*2026 ஜனவரி 22, 23 மற்றும் 24, கான்ஹா சாந்தி வனம்*



## Masterclasses with Daaji

You can start Heartfulness meditation at any time! Join Daaji for a three-part masterclass series, where he shares the benefits of the Heartfulness way and explains how to add Heartfulness relaxation, meditation, cleaning and prayer to your daily routine. All masterclasses are free of charge.

https://heartfulness.org/global/masterclass/

## Heartfulness Practices

Discover Heartfulness practices-learn to relax, meditate, clean and pray.

https://heartfulness.org/in-en/heartfulness-practices/

ஹார்ட்ஃபுல்னெஸ்

தூய்மை விதியை | வடிவமைக்கிறது

